# விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகம்
# பேராதனைப் பல்கலைக்கழகம்
# இலங்கை

## பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரல்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளர் பதவிக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் விவசாயத்துறையுடன் தொடர்பான கலாநிதி பட்டப்பின்படிப்பு தகைமை மற்றும் நிர்வாக ரீதியாக அனுபவமுடைய 63 வயதை விட குறைந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் கடமைகளை செய்யக்கூடிய தொடர்புகளை ஏற்படுத்தி கல்விக்கு தலைமை தாங்கக்கூடிய, கல்விச் சூழலில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக தேவையான தனிப்பட்ட திறமைகள் மற்றும் நிறுவகம் தொடர்பான அர்ப்பணிப்பு மற்றும் புரிந்துணர்வுடன் கூடிய நபரொருவராக இருக்க வேண்டும்.

விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் சட்ட விதிகளின் பிரகாரம் பணிப்பாளர் முழு நேர உத்தியோகத்தரொருவராகவும், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகவும் பிரதான கல்வி உத்தியோகத்தராகவும் நிறுவகத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தரும் ஆவார். பணிப்பாளர் நிறுவகத்தீன் முகாமை சபையினதும் இணைப்புக் குழுவினதும் தலைவராக இருப்பதுடன் நிறுவகத்தின் ஒவ்வொரு கல்விச் சபையீன் அங்கத்தவராவர். அவர் / அவள் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி முதல் மூன்று வருட காலப்பகுதிக்காக அல்லது 65 வயது பூர்த்தியாகும் வரை இப்பதவியை வகிக்கலாம்.

இலங்கையின் விவசாயத்துறை தொடர்பான ஒரே பட்டப்பின்படிப்பு நிறுவனமான விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகம் கடந்த 50 வருடங்களாக பல்வேறு விவசாயத் துறைகளில் வேகமாக வியாபித்துள்ளது. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு கருத்திற்கொள்ளக்கூடிய பங்களிப்பொன்றை வழங்குவதற்காக விவசாயத் துறையில் எதிர்வுகூறக்கூடிய மாற்றங்களுக்கு இணங்க தமது கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை மேலும் விரிவாக்குவதற்கும் பல்வகைப்படுத்துவதற்கும் விரிவான பல செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு நிறுவகம் எதிர்பார்த்துள்ளது.

இச்சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக தொலைநோக்குள்ள கல்வி பின்னணி மற்றும் ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவத்தின் விசேட சாதனைகளை கொண்டுள்ள ஒருவரை முகாமைத்துவ சபை எதிர்பார்க்கின்றது.

எதிர்பார்ப்புள்ள விண்ணப்பதாரிகள் தமது பிறந்த திகதி, நிறுவகத்தின் அபிவிருத்தி தொடர்பான நோக்க கூற்றொன்று, பதவிக்கு நியமிக்கப்பட்டால் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கும் நிலைமை தொடர்பான சுருக்கமான விபரமொன்று என்பவற்றை உள்ளடக்கி விரிவான விண்ணப்பமொன்றை 2026.09.11 ஆந் திகதி மதியம் 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத் தபாலில், பிரதி பதிவாளர், விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகம், பழைய கலஹா வீதி, பேராதனை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். இல்லாவிட்டால் அத்திகதி அல்லது அதற்கு முன்னர் அவருக்கு கையளிக்க வேண்டும். அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் சேவை புரியும் விண்ணப்பதாரிகள் அவர் / அவள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியுமென குறிப்பிட்டு சேவை வழங்குநரின் கடிதமொன்றை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதி பதிவாளர், விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகம், (தொலைபேசி இல. 081-2388203) அல்லது நிறுவகத்தின் இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.
(www.pgia.ac.lk)

**பிரதி பதிவாளர்,**
**விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகம்,**
**2026.08.12**